ஊடகச் செய்தி எண்.13/2017 | நாள்.11-04-2017

பொய் வழக்கு, அத்துமீறல், அராஜக செயல்களில் ஈடுபட்டு வரும் சிவகாசி நகர் காவல் ஆய்வாளர் திரு. பாஸ்கரன் அவர்களை உடனடியாக பணி நீக்கம் செய்து உரிய விசாரணை நடத்துக தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் வலியுறுத்தல்

தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் சிவகாசி வட்டக்கிளைத் தலைவர் திரு,ஆர்,வைரவன் கடந்த 24.03.2017ம் தேதி இரவு சிவகாசி இரயில்வே கேட்டை தன்னுடைய இரு சக்கர வாகனத்தில் கடந்து சென்றபோது அங்கிருந்த சிவகாசி காவல் நிலைய சட்டம் ஒழுங்கு காவல் ஆய்வாளர் திரு.பாஸ்கரன் அவரை தடுத்து நிறுத்தி விதிகளை மீறி சாலையை கடந்து வந்ததாக கூறி அசிங்கமான வார்த்தைகளால் திட்டியுள்ளார். அதற்கு வைரவன், "நான் போக்குவரத்து விதிகளை மீறி வாகனம் செலுத்தியதாக நினைத்தால் அபராதம் விதியுங்கள், அதை கட்டி விடுகிறேன். ஆனால் அதற்காக தரக்குறைவான வார்த்தைகளால் பேச வேண்டாம்" என்றும், தான் ஒரு அரசு ஊழியர் என்றும், தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தில் சிவகாசி வட்டக்கிளை தலைவராக இருப்பதாகவும் தெரிவித்துள்ளார். வைரவனின் வார்த்தைகளால் கோபமடைந்த காவல் ஆய்வாளர் பாஸ்கரன், அவரது இருசக்கர வாகனத்தின் சாவியை எடுத்துக்கொண்டு அவரிடம் ஆய்வாளர் என்ன வேலை செய்கிறாய் என்று கேட்டு அதற்கு அவர் தான் ஒரு சாலைப்பணியாளர் என்றும் தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தில் சிவகாசியின் வட்டத் தலைவராக இருப்பதாகவும் தெரிவித்ததும், "ரோடில் மண்ணை அள்ளிப்போடும் வேலை பார்க்கும் உனக்கெல்லாம் என்ன மரியாதை வேண்டியிருக்கு" என்று அசிங்கமாகப் பேசி, கண்ணத்தில் அரைந்தும், கடுமையாக தாக்கியும் "தலைக்கவசம் அணியாமல் வண்டி ஓட்டியதற்காக உன் மீது வழக்கு போடுகிறேன்." என்று மிரட்டியுள்ளார். மேலும் காவல் நிலையம் கொண்டு சென்று பிறகு இரவு 11.00 மணியளளவில் அவரை காவல் நிலையத்தில் வைத்திருந்து வெள்ளைத் தாளில் கையொப்பம் பெற்றுக்கொண்டு பிறகு விடுவித்துள்ளார்.

மேற்கண்ட நிகழ்வு தொடர்பாக எமது சங்கத்தின் மாவட்ட நிர்வாகிகள் காவல் ஆய்வாளர் பாஸ்கரனிடம் நேரடியாக சென்று பேசியபோது ஆய்வாளர் அவர்களையும் தரக்குறைவான வார்த்தைகளால் பேசியும், அசிங்கமான வார்த்தைகளால் ஏசியும் உள்ளார். அதனால் காவல்

தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம்
Tamilnadu Government Employees' Association
பதிவு எண் 237/84
தோழர் எம்.ஆர். அப்பன் இல்லம்
எண் : 46, தேரடித் தெரு, திருவல்லிக்கேணி, சென்னை - 600 005.
தொலைபேசி எண் : 28441286, 28440938, 28443886 பேக்ஸ் : 28443601

ஆய்வாளர் பாஸ்கரனின் அராஜகப் போக்கை கண்டித்து தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் மாநிலத் தலைவர் திரு,மு,சுப்பிரமணியன் மற்றும் மாநிலத் துணைத் தலைவர் திரு.ந.குமாரவேல், விருதுநகர் மாவட்டத் தலைவர் திரு.முத்துராஜ் விருதுநகர் மாவட்டச் செயலாளர் திரு.கண்ணன், தமிழ்நாடு ஆரம்பப் பள்ளி ஆசிரியர் கூட்டணியின் மாவட்டச் செயலாளர் திரு.வைரமுத்து, இந்திய தொழிற் சங்க மையம் திரு. சுரேஷ்குமார், விருதுநகர் மாவட்ட உழைக்கும் பெண்கள் ஒருங்கிணைப்புக்குழு திருமதி. மகாலட்சுமி, தமிழ்நாடு அனைத்துத்துறை ஓய்வூதியர் சங்கத்தின் மாவட்டத் தலைவர் திரு. குருசாமி மற்றும் இதர தோழமைச் சங்க நிர்வாகிகளும், பொறுப்பாளர்களும், உறுப்பினர்களும் சேர்ந்து 5.4.2017ம் தேதி ஒரு கண்டன ஆர்ப்பாட்டத்தை சிவகாசி கோட்டாட்சியர் அலுவலகம் முன்பு காவல் ஆய்வாளர் பாஸ்கரனுக்கு எதிராக கண்டன ஆர்ப்பாட்டம் நடத்தினர். ஜனநாயக முறையில் பொதுமக்களுக்கு எவ்வித இடையூறும் இல்லாமல் நடைபெற்ற இந்த ஆர்ப்பாட்டம் சட்டவிரோதமானது என்றும் உரிய அனுமதி இல்லாமல் நடந்ததாகவும் சித்தரித்து மேற்கண்ட தலைவர்கள் மற்றும் நிர்வாகிகள் மீது இ.த.ச. 143 மற்றும் 188 பிரிவுகளின் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளார். மேலும் ஆய்வாளர் பாஸ்கரன் அவரைக் கண்டித்து தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் சார்பில் கண்டன போஸ்டரை ஒட்டிய ஊழியரையும் தாக்கியுள்ளார்.

சிவகாசி நகர் காவல் நிலைய சட்டம் ஒழுங்கு காவல் ஆய்வாளர் திரு. பாஸ்கரன் அவர்களின் இந்த செயலானது அராஜகமானதும், அத்துமீறியதுமானதாகும். அரசு ஊழியர்களை அவதூறாகப் பேசுவதும், கிரிமினல் குற்றவாளிகளைப் போல் நிற்க வைத்து காவல் நிலையத்தில் விசாரணை செய்வதும் அடிப்படை விதி மீறல்களின் உச்சகட்டமாகும். போராட்டம் செய்வதும், ஆர்ப்பாட்டம் நடத்துவதும் ஜனநாயக நாட்டில் அனுமதிக்கப்பட்ட ஒன்றாகும். அதற்காக பிணையில் விடக்கூடாத குற்றப் பிரிவுகளில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்வது அரசு ஊழியர்களை மிரட்டிப் பார்க்கும் செயலாகும். காவல் துறை ஆய்வாளர் பாஸ்கரனின் செய்கைகள் அவர் உண்மையில் தெளிந்த சிந்தனையுடன்தான் இருக்கிறாரா என்ற கேள்வியை எழுப்பியள்ளது. அதனால் அவரை உடனடியாக தற்காலிக பணி நீக்கம் செய்து அவர் மீது துறைவாரி விசாரணை மேற்கொள்ள வேண்டும் என்று தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் வலியுறுத்திக் கேட்டுக் கொள்கிறது,

தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் தலைவர்களையும், நிர்வாகிகளையும், சங்கத்தையும் அவதூறாகவும் தவறாகவும் பேசியிருக்கும் காவல் ஆய்வாளர் பாஸ்கரன் மீது உடனடியாக உரிய நடவடிக்கை எடுக்கப்படாவிட்டால் தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் மாநிலம் தழுவிய போராட்டத்தை முன்னெடுக்க வேண்டிய சூழ்நிலை தவிர்க்க இயலாததாகிவிடும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

# தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம்
## Tamilnadu Government Employees' Association

பதிவு எண் 237/84

**தோழர் எம்.ஆர். அப்பன் இல்லம்**

எண் : 46, தேரடித் தெரு, திருவல்லிக்கேணி, சென்னை – 600 005.

தொலைபேசி எண் : 28441286, 28440938, 28443886 பேக்ஸ் : 28443601


எனவே, சிவகாசி காவல்நிலைய ஆய்வாளர் திரு.பாஸ்கரன் அவர்களை உடனடியாக தற்காலிக பணி நீக்கம் செய்து அவர் மீது துறைவாரி விசாரணை நடத்தப்பட வேண்டும் என்ற எங்கள் கோரிக்கையை தாங்கள் நிச்சயம் நிறைவேற்றுவீர்கள் என்ற நம்பிக்கையுடனும், ஜனநாயக முறையில், பொதுமக்களுக்கு இடைஞ்சலின்றி ஆர்ப்பாட்டம் நடத்தியதற்காக சங்கத் தலைவர்கள் மற்றும் நிர்வாகிகள் மீது போடப்பட்டுள்ள முதல் தகவல் அறிக்கையை நடவடிக்கை கைவிடப்படுவதாக(Action Dropped) முடித்து வைக்க வேண்டும் என்ற எதிர்பார்ப்புடனும் காத்திருக்கிறோம்.

நன்மதிப்புகளுடன்
தங்கள் நம்பிக்கையுள்ள,

(மு. அன்பரசு)
பொதுச்செயலாளர்